2011 ஆகஸ்ட் 26]

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் என்னுடைய அனுமதியில்லாமல் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.* Doctor, please sit down. Please sit down. *(குறுக்கீடு)* Doctor, please sit down. *பேரவை முடிந்தவுடன், நீங்கள் என்னுடைய அறைக்கு வாருங்கள்; அதுபற்றி* discuss *செய்யலாம். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடு)* Doctor, please sit down. Please sit down. *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

முற்பகல் 10-25

3. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைக்கு நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபை நடவடிக்கைகள் தொடங்கி* Zero Hour-*ம் இன்றைக்கு இல்லையென்ற நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒரு சிறப்பான திட்டத்தை, இந்தியாவிற்கே ஒரு முன்னோடியான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இருக்கின்ற அத்தனைக் கல்வியாளர்களின் மனதிலும் ஏற்பட்டிருந்த சஞ்சலங்களைப் போக்குகின்ற வகையில், எது உண்மையான சமச்சீர் கல்வித் திட்டம் என்பதற்கு எடுத்துக்காட்டாக மாண்புமிகு அம்மா அவர்கள் கல்வியில் ஒரு புதிய வரலாற்றினைத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்தியாவிற்கே முன்னோடித் திட்டமாக இது அமையும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டப் பேரவை வரலாற்றில் இதற்கு முன்னால் எத்தனையோ அரசுகள் இருந்திருக்கின்றன, ஆனால், கல்வியில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய ஒரே அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அம்மா அவர்கள், எதிர்காலத்தில் தமிழகத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகள், இந்தியாவில் இருக்கின்ற

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அனைத்து மாணவ, மாணவிகளைக். காட்டிலும் அனைத்துத் துறைகளிலும் மின்னிட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இந்தச் சிறப்பானத் திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சட்ட மன்றப் பேரவையின் சார்பாக எங்களுடைய இதயபூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அம்மா அவர்கள், எதிர்கால சமுதாயம் ஒளிமயமாக வாழ வேண்டும் என்ற வகையில் அறிவிப்பை வெளியிட்டமைக்கு சபை உறுப்பினர்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)* Doctor, please sit down. *(குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுந்து ஏதாவது சந்தேகம் எழுப்பினால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பதில் சொன்ன பிறகு, அவர் உட்கார வேண்டுமென்பதுதான் மரபு. அவருக்கு விளக்கம் தேவையென்றால், பேரவைத் தலைவரின் அறைக்குச் சென்று கேட்டுக்கொள்ளலாம். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். (குறுக்கீடு)* Please sit down, Doctor. *(குறுக்கீடு) திரு. சவுந்தரராசன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)* Doctor, please sit down.

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Doctor, please sit down. *(குறுக்கீடு)*

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சமச்சீர் கல்வி என்கிற உயரிய இலட்சியத்தை நோக்கி, மிகப் பெரிய முன்னேற்றமான ஒரு அடி-* leap- *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பினாலே எடுத்து வைக்கப்பட்டுள்ளது. (மேசையைத்*

தட்டும் ஒலி) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் இது மிகச் சிறந்த, மிக நல்ல துவக்கமென்று கூறி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இன்றைக்குச் சட்டமன்றத்தில் கல்வி சம்பந்தமான பல்வேறு அறிவிப்புகள் மட்டுமல்ல, தமிழகத்தில் உண்மையான சமச்சீர் கல்வியை அமல்படுத்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். இதனை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மனதாரப் பாராட்டுகிறோம்.

அதேநேரத்தில், பள்ளிக் கல்வி படித்துக் கொண்டிருக்கக்கூடிய, குறிப்பாக சாதாரண ஏழையெளிய மாணவ, மாணவிகள், தங்களால் செய்ய முடியாத, வாங்க முடியாத பொருட்களைக்கூட, வாங்குவதற்கான முறையிலும், அவர்கள் படித்து முன்னேற வேண்டுமென்ற அடிப்படையான இலட்சியத்தோடும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தை இன்றையதினம் அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் அனைத்தும் தமிழகத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலும் படிக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்குப் பயன்படும். நிச்சயமாக அவர்கள் எதிர்காலத்தில் முன்னேறுவார்கள் என்ற அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நாங்கள் வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. சு. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையான சமச்சீர் கல்வி எது என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 110-வது விதியின்கீழ் வைத்த அறிக்கையின்மூலம் மிகத் தெளிவாகியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு வேறு சான்றுகள் தேவையில்லை. கம்யூனிஸ்டு கட்சியினரே இதை வரவேற்கிறார்கள் என்கிறபொழுது, அதைவிட நமக்கு வேறு சான்று தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அவர்களுக்குத்தான் கடந்த காலத்திலே கொஞ்சம்

சந்தேகம் இருந்தது. அந்த சந்தேகம் இப்பொழுது தீர்ந்திருப்பதற்காக உண்மையிலேயே அவர்களைத்தான் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-30

சமச்சீர் கல்விக்கும், பொதுப் பாடத் திட்டத்திற்கும் வேறுபாடு தெரியாமலே அதைப்பற்றி எல்லோரும் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். பொதுப் பாடத் திட்டம் என்பது, நகரங்களிலேயுள்ள பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளுக்கு மிகவும் எளிதானது; கிராமங்களிலே, ஏழைக் குடிசைகளிலே இருக்கின்ற பிள்ளைகளுக்கு மிகவும் கடினமானது. ஆகவே, வெறும் பொதுப் பாடத் திட்டத்தை மட்டும் நிறைவேற்றுகின்றபொழுது, அதனால் உண்மையிலேயே பாதிக்கப்படுபவர்கள் கிராமங்களிலேயுள்ள ஏழை மக்கள், அதுவும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள்தான்.

பொதுப் பாடத் திட்டத்தைச் சமச்சீர் கல்வி என்று சொல்லி, அதை அமல்படுத்தாததன்மூலம் சமூக நீதியே புறக்கணிக்கப்பட்டது என்கின்ற ஒரு தவறான கருத்தைத் தொடர்ந்து சில அரசியல் கட்சிகள் நாட்டிலே பரப்பி வருகின்றன. அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்புகள், வசதிகளை உருவாக்கிவிட்டு, அதற்குப் பிறகு பொதுப் பாடத் திட்டத்தைக் கொண்டுவருகிறபொழுது, எல்லோரும் சம வாய்ப்போடு அதிலே போட்டியிட்டு வெற்றி பெறமுடியும். அந்த நிலைமையினை இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிக்கை தருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) படித்தவர்களுக்குத்தான் படிப்பின் அருமை தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பிலே இதை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன் அவர்கள்.*

திரு. க. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறும்பொழுது, "கம்யூனிஸ்டுகள் வரவேற்றுவிட்டார்கள், எனவே அது முழுமை பெற்றிருக்கிறது" என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், ஏற்கெனவே "குழம்பிப் போயிருக்கிறார்கள்" என்ற ரீதியிலும் கருத்தைத் தெரிவித்தார்கள். கண்டிப்பாக அப்படியல்ல.*

சமச்சீர் கல்விப் பிரச்சினையில், நாங்கள் கடந்த ஆட்சியிலும் தெளிவாக இருந்தோம்; இந்த ஆட்சி வந்தவுடனும் எங்கள் கருத்தைத் தெளிவாகப் பதிய வைத்தோம்.

நாங்கள் சொன்னது என்னவென்றால், சமச்சீர் கல்வியை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்த எண்ணத்தில், எந்தக் கோணத்தில், எந்த நோக்கத்தில் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னார்களோ, அந்த நோக்கம், அந்தக் கொள்கையிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. கடந்த ஆட்சியிலும் இதைப் பதிவு செய்திருக்கிறோம்.

ஆனாலும், இதில் ஒரு குழப்பத்தை உருவாக்குகிறார்கள்; அந்தக் குழப்பத்திற்கு இடமில்லாமல், இதைச் செயல்படுத்திக்கொண்டே. இந்த சமச்சீர் கல்வியை நாம் சீர்திருத்த வேண்டுமென்று சொன்னோம். இன்றைக்கு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு சிறப்பான அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். இதன்மூலமாக நாங்கள் கொண்ட கருத்தான சமச்சீர் கல்வி என்பது பொதுப் பாடத் திட்டம் மட்டுமல்ல, கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும், கல்விக்கான வகுப்பறைகளைச் சம நீதி அடிப்படையில் உருவாக்க வேண்டும் என்ற கொள்கையும் இன்றைக்கு நிலைநாட்டப்பட்டிருக்கிறது.

ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். நாங்கள் ஏற்கெனவே தொடர்ந்து ஒரு கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே, +1, +2 என்ற பாடத் திட்டம் என்பது தமிழ்நாட்டில் பொதுப் பாடத் திட்டமாகத்தான் இருந்தது. இருந்தாலும், தனியார் பள்ளி நிறுவனங்களில்தான் அதிகமான மாணவர்கள் படித்தார்கள். அதற்குக் காரணம், அங்கே தரம் இருக்கிறதென்ற ஒரே நோக்கம்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. குணசேகரன், போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபொழுது, சமச்சீர் கல்வியிலே எங்களுக்கு ஏற்கெனவே குழப்பம் இருந்தது என்று சொன்னார்கள். ஒரு பிரச்சினையிலே, அபிப்ராய வித்தியாசம், சந்தேகம் என்று இருப்பதில் தவறில்லை. தரம் உயர்த்தப்பட்ட நிலையில், சமச்சீர் கல்வியை அமல்படுத்த

வேண்டுமென்று நாங்கள் முன்பும் பேசினோம், இங்கு அவையிலும் பேசினோம். அதை நோக்கி ஒரு பெரிய அடியை அரசு எடுத்து வைத்திருக்கிறது என்பதை நான் பாராட்டுகிறேன் என்றும் குறிப்பிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் எந்தக் குழப்பமும் எமக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கத்திலிருந்தே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால், சென்ற திமுக ஆட்சி அமல்படுத்திய சமச்சீர் கல்வி என்பது, ஒரு அரை வேக்காட்டுத்தனமானது; (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்காலச் சந்ததியினரை உருவாக்குவதற்குச் சரியான வழிமுறை இல்லாத ஒரு திட்டம் என்பதைத்தான் மனிதநேய மக்கள் கட்சி தனது கருத்தாகச் சொல்லி வந்தது. அந்த அரை வேக்காட்டுத்தனத்தையெல்லாம் நீக்கி, சீராக, முறையாக, நம்முடைய எதிர்காலச் சந்ததியினர் சிறந்த கல்வியைப் பெற்று, சிறந்த கல்வியாளர்களாக உருவாகக்கூடிய வகையிலே, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்த அறிவிப்புகள் அமைந்திருக்கின்றன. அதை மனிதநேய மக்கள் கட்சி மனமார வரவேற்கின்றது. குறிப்பாக, செயற்கைக்கோள் வழியாக அனைத்து பள்ளிகளுக்கும் கல்வி சென்றடையும். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே அனைத்து மாணவர்களும் சமம். சென்னையில் இருக்கக்கூடிய, பெருநகரத்திலே இருக்கக்கூடியவர்கள் என்ன கல்வியைப் பெறுகிறார்களோ, அதைக் கிராமங்களில் உள்ளவர்களும் பெறுவதற்கு வழிவகுக்கக்கூடிய ஒரு அருமையான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-35

அதேபோல, சிறுபான்மை மொழி பேசக்கூடிய மாணவர்களுடைய நலனையும், இந்தத் திட்டத்திலே கருத்தில் எடுத்துக்கொண்டு அவர்களுடைய உரிமைகளும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று சொல்லி விடைபெறுகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜான் ஜேக்கப். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜான் ஜேக்கப் அவர்கள்.*

திரு. எஸ். ஜான் ஜேக்கப்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அளித்துள்ள இந்த அறிக்கையை காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். காரணம், தமிழகத்திலே ஏழை என்றோ, பணக்காரன் என்றோ, கிராமம் என்றோ, நகரம் என்றோ இல்லாமல், எல்லோருக்கும் ஒரே கல்வியைத் தரும் விதத்தில், ஒரு சிறப்பான கல்வியைத் தர நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வந்திருப்பது, நமது தமிழகத்தை, ஏழைய தமிழகத்தை, இன்னும் பலமான தமிழகமாக ஆக்குவதற்கு வகைசெய்யும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாணவர்களின் நலனில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் வைத்திருப்பது, உண்மையிலேயே மதிக்கத்தக்கது; சிறப்பானது.*

அதோடு, நான் சொல்வது, தமிழகத்திலே தேவையுள்ள மாணவர்களுக்கு இந்தி மொழி படிப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வசதி செய்து தர வேண்டும். தேவையில்லாதவர்களுக்கு அல்ல; தேவையுள்ளவர்கள் இந்தி படித்தால் போதும். அந்த வசதியையும் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சமச்சீர் கல்வி முழுமையடையும் நோக்கத்தில், அடிப்படைத் தேவைகளான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தித் தரப்படும் என்றும், கிராமப்புற மாணவ, மாணவிகள் மிகவும் எதிர்பார்த்தபடி, அவர்களுக்குத் தேவையான* Geometry Box, School Bags *போன்றவை எத்தவித வேறுபாடும்*

இல்லாமல், மாணவர்களுக்கிடையே ஓர் ஒற்றுமையை உருவாக்கும் வகையில், வழங்கப்படும் என்றும் இன்றைக்கு விதி 110-ன்கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக உளமாற வரவேற்கின்றேன்.

அதேசமயத்தில், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக, ஒரு சிறிய வேண்டுகோளையும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வைக்க விரும்புகிறேன். இந்த சமச்சீர் கல்வி முழுமையாக வெற்றிபெற வேண்டுமென்று சொன்னால், Central Board Schools பாடத் திட்டங்களின்மூலம் துவக்கப்படும் புதிய பள்ளிகளுக்கு, விதிமுறைகள் கடுமையாக்கப்பட வேண்டும் என்றும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமச்சீர் கல்வி என்கிற பேரிலே, ஒரு சுய தம்பட்டம், சுய விளம்பரம் கடந்தகால திமுக ஆட்சியில் செய்யப்பட்டது. ஏழையெளிய, நலிந்த, அடித்தளத்து மாணவர்களின்மீது திணித்து, தன்னைப் புகழ்பாட வேண்டும்; தங்களுடைய புகழை நிலைநிறுத்த வேண்டுமென்று விரும்புகிற, அப்படிப்பட்ட ஒரு திட்டமாக அது அமைந்திருந்தது என்பதைக் கடந்த காலங்களிலே நாங்கள் கண்டித்து வந்தோம். ஏழையெளிய மக்கள், நலிந்த மக்கள் கல்வியினால் மட்டுமே வளர்ச்சியடைய முடியும்; கல்வி மட்டுமே அவர்களைக் கைதூக்கி விடும். ஆகவே, "கல்விப் புரட்சி ஏற்பட்டால்தான், ஒரு சமத்துவப் புரட்சி நாட்டில் நடக்கும்" என்பது பேரறிஞர் அம்பேத்கார் அவர்களுடைய கருத்தாக இருந்தது. இன்றைக்கு அந்த எண்ணங்களை, இலட்சியங்களை நிறைவேற்றுகிற வகையிலே ஏழையெளிய, நலிந்த மக்கள், கிராமப்புற மக்கள் படிப்பதற்கு அந்த மாணவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் இலவசமாகத் தந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களை "கல்வி புரட்சித் தந்த சமத்துவப் பேரொளி" என்று பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்யும்போது, அது தொடர்பான விதி பற்றி சில குழப்பங்கள் இருப்பதால், தங்கள் வாயிலாக பத்திரிகையாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெளிவுபடுத்தலாம் என்று நான் எண்ணுகிறேன்.

கடந்த வாரம்கூட, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், கடந்த தி.மு.க. அரசு எழுப்பிய புதிய கட்டடத்தில் ஒரு SuperMulti-Speciality மருத்துவமனை தொடங்கப்படும் என்று விதி 110-ன்கீழ் நான் ஓர் அறிக்கையை இந்த அவையிலே தாக்கல் செய்த பிறகு, சில சட்டமன்றக் கட்சித் தலைவர்கள், விதி 110-ன்கீழ் இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதால், கருத்துகளைச் சொல்லலாமோ, இல்லையோ என்று தயங்கினோம் என்று இங்கே தெரிவித்தார்கள். சில பத்திரிகைகளில்கூட மறுநாள் செய்தி வெளியிட்டிருந்தார்கள். "விதி 110-ன்கீழ் முதலமைச்சர் இந்த அறிக்கையைத் தாக்கல் செய்த பிறகு, பேரவைத் தலைவர் சிறப்பாக விதிவிலக்கு அளித்து, சட்டமன்றக் கட்சித் தலைவர்களையெல்லாம் அதுகுறித்துப் பாராட்டு தெரிவித்துப் பேச அனுமதித்தார்" என்று செய்தி வெளியிடப்பட்டிருந்தது. 'அப்படியல்ல' என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்த பிறகு, அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் விளக்கம் கேட்க முடியாது; இந்த விதியின்படி விளக்கம் கேட்க முடியாது. அந்த அறிக்கையின்மீது எந்த வினாக்களையும் எழுப்ப முடியாது. ஆனால், அதே சமயத்தில், அந்த அறிக்கையில் உள்ள பொருளுக்கு நன்றி தெரிவிக்கவோ, பாராட்டு தெரிவிக்கவோ எந்தத் தடையும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கூறியதை, மாண்புமிகு உறுப்பினர்கள் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.